**செ. கு. எண்**: 264 **நாள்**:26.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – **26.7.2012**

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், இந்திரா நகர் சேலையூரில் இயங்கி வரும் சியோன் மெட்ரிகுலேசன் பள்ளிக்காக குத்தகையின் அடிப்படையில் விடப்பட்ட பெருங்களத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.லோகேஷ் என்பவருக்கு சொந்தமான பேருந்தில், திருப்பெரும்புதூர் வட்டம், வரதராஜபுரம், பி.டி.சி. குவார்ட்டர்ஸ், **2**வது பிளாக்கில் வசித்து வரும் திரு.சேதுமாதவன் என்பவரின் மகள், இரண்டாம் வகுப்பு மாணவி செல்வி. சுருதி, **25.7.2012** அன்று மாலை பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, பேருந்திலிருந்த துவாரம் வழியாக கீழே விழுந்ததில் பேருந்தின் பின் சக்கரம் ஏறி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தாள் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயறுற்றேன்.

பழுதுள்ள பேருந்தை, குத்தகையின் அடிப்படையில், பள்ளி வாகனமாக இயக்கியதற்குக் காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறை மற்றும் பள்ளிக் கல்வி துறை அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த மாணவி செல்வி. சுருதியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த செல்வி. சுருதியின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**